**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

O.S No. 276 of 2024

Deposition of P.W.1

Name of the Witness: திரு.சுப்பிரமணி

Date : 21.11.2025

**குறுக்கு விசாரணை**

நான் சொன்ன விவரங்கள் அடிப்படையில் தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. தாவா சொத்து எனக்கு உரிமையானது. தாவா சொத்து முதலில் பெருமாள் என்பவருக்கு 09.02.1957 கிரைய பத்திரம் மூலமாக பாத்தியப்பட்டது என்றால் சரிதான். தாவாவில் பெருமாள் 11.02.1957 தேதியில் கிரையம் வாங்கியதாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். ஆனால் பிரமாண வாக்குமூலத்தில் பெருமாள் என்பவருக்கு 09.02.1957 கிரைய பத்திரம் மூலமாக பாத்தியப்பட்டது என்று சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். தாவா சொத்து கொண்டாம்பட்டி கிராமத்தில் சர்வே எண் 707. 3 ஏக்கர் 72 சென்ட் என்றால் சரிதான். 3 ஏக்கர் 72 சென்ட்டிற்கு எனக்கு செக்குபந்தி தெரியாது. பெருமாள் குஞ்சப்பகவுண்டரிடம் சொத்தை வாங்கினார். பெருமாளின் மனைவி பெயர் ராஜம்மாள், அவருக்கு சீனிவாசன், நாகராஜ் என்ற இரண்டு மகன்கள். பெருமாள் லாரி டிரைவர் என்றால் சரிதான். பெருமாள் அவரின் சுய சம்பாதிய சொத்தை வைத்து தான் சொத்தை வாங்கினார் என்றால் சரிதான். அவருடைய தனிப்பட்ட சொத்தை அவர் யாருக்கு வேண்டுமானாலும் எழுதி வைக்கலாம் என்றால் சரிதான்.

2) பெருமாள் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை அவரது மகன் நாகராசுக்கு 09.02.1957ல் தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரம் மூலமாக

சர்வே எண் 707ல் 3 ஏக்கர் 72 சென்ட்டில் 1.86 சென்டை அவரது மனைவி ராஜம்மாவை கார்டியாக நியமித்து அவரது மகன் நாகராஜ்க்கு எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். தாவாவில் செட்டில்மெண்ட் தேதி 11.02.1957 என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வாதிகளாகிய நாங்கள் சிறு வயதில் இருந்தே கர்நாடகாவில் தான் வசித்து வருகிறோம். தாவா சொத்தில் எப்போதும் குடியிருந்ததில்லை, வந்து வந்து போவோம். தாவா சொத்து இருக்கும் ஊரில் வாதிகள் நாங்கள் பிறக்கவும் இல்லை. வந்து வந்து போவோம். என்னுடைய ஆதார்கார்டு, வாக்காளர் அடையாள அட்டை எல்லாமே கர்நாடகா முகவரியில் தான் உள்ளது.

Sd/Tmt.U.Monica, M.L.,
Additional District Judge,
Dharmapuri.